மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆறுமுகம், ஆசிரியர்கள் மாணவர்களை ஊக்குவிக்க வேண்டுமேயொழிய, ஆசிரியர்களை நாம் எப்படி ஊக்குவிப்பது? வினா எண் 85, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

85—

மணி மண்டபம்

***5925**—திரு. நா. சந்திரமோகன்:*

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி கோவிந்தராஜனுக்கு சீர்காழி நகரில் மணி மண்டபம் கட்டுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் கொடுத்த வரலாற்றுச் சிறப்புமிக்க சீர்காழி தொகுதியில் பிறந்த திரைப்படப் பின்னணிப் பாடகர், கலைமாமணி சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள், தமிழிசையை மூச்சாகக் கொண்டவர்கள். கர்நாடக சங்கீதத்தை மரபு முறை வழுவாமல் மிகச் சிறப்பாகப் பாடியவர்; எண்ணற்ற பக்திப் பாடல்களைப் பாடியவர்; திரை இசையில் தனக்கே உரித்தான தனித் தன்மையோடு ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி, கம்பீர கான மணி என்ற பட்டம் பெற்றவர். தமிழக அரசின் கலைமாமணி விருதும், மத்திய அரசின் பத்மஸ்ரீ விருதும், தமிழக அரசின் சிறந்த பின்னணிப் பாடகர் என்ற விருதும், சங்கீத நாடக அகாடமி விருதும், இதுபோன்ற பல விருதுகளைப் பெற்றவர். ஆலயங்கள் கட்டுவதற்கு இசை நிகழ்ச்சிகளை நடத்தியவர். ஏழை மக்கள் கல்வி பயில உதவிகள் வழங்கியவர். தமிழக மக்களின் காவல் தெய்வமாகவும், உச்ச நீதிமன்றத்தின் மூலம் காவிரித் தண்ணீரைப்

2002 அக்டோபர் 30]

பெற்றுத் தந்து தமிழக மக்களின், விவசாயிகளின் வயிற்றில் பாலை வார்த்த காவிரித் தாய் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்கள் நடித்த 'முத்துச் சிப்பி' என்ற படத்தில் "தொட்ட இடம் துலங்க வரும் தாய்க்குலமே வருக" என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க பாடலையும், மறைந்த மாமேதை, பொன்மனச் செம்மல் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் நடித்த 'இதயக்கனி' என்ற திரைப்படத்தில், "நீங்கள் நல்லா இருக்கணும் நாடு முன்னேற, இந்த நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற" என்ற பாடலையும், "வெற்றியின் நாளை சரித்திரம் சொல்லும்" என்ற பாடலையும் பாடி, இப்படி எண்ணற்ற பாடல்கள் மூலம் ஏழைகளின் முன்னேற்றத்திற்காகப் புரட்சித் தலைவர் பாடுபட்டதைப் பாடலாகப் பாடிக் காட்டியவர் பத்மஸ்ரீ டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீர்காழியைப் பற்றித் தெரியும். என்ன செய்ய வேண்டும்?

(முற்பகல் 11-20

திரு. நா. சந்திரமோகன்: தமிழக திரைப்படத் துறையினருக்கு எண்ணற்ற பல நன்மைகளைச் செய்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே திரைப்படப் பின்னணிப் பாடகர் கலைமாமணி டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் அவர்களை நினைவுகூரும் வகையில், வருகின்ற நிதி ஆண்டிலாவது ஒரு மணிமண்டபம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்று பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் சுதந்திரத்திற்காகவும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும் அயராது பாடுபட்ட தலைவர்களுடைய நினைவுகளைப் போற்றிச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 86, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.